514

# எல்லாரும் ஓர் நிறை



0-,6x
N52-2
56210

ஸ்டார் பிரசுரம்

# எல்லாரும் ஓர் நிறை

ப. ஸ்ரீனிவாசன்

இந்திய அரசாங்கப் பரிசு பெற்ற புத்தகம்

ஸ்டார் பிரசுரம்
66, பெரிய தெரு.
திருவல்லிக்கேணி :: சென்னை—5

முதற்பதிப்பு :- ஜனவரி, 1957
இரண்டாம் பதிப்பு :- பிப்ரவரி 1961
உரிமை பதிவு

['வெகுஜன இலக்கிய வளர்ப்புத்' திட்டத்தின் இந்திய அரசாங்கக் கல்வி இலாக்காவால் பரிசு அளிக்கப்பெற்ற புத்தகம்.]

விலை ரூ. 0-75

210

STAR PUBLICATIONS
66, Big Street
Triplicane :: Madras—5

முத்தையா அச்சகம், ஜானி ஜான் தெரு, சென்னை—14

# முன்னுரை

எங்கும் சோஷலிஸம் என்பதே பேச்சு. 'எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு.' சோஷலிஸ சமூகம் வரப் போகிறதாம். நம் சட்டசபை அவ்வாறு தீர்மானித்து விட்டது. சர்க்காரும் அதற்கு ஏற்பாடு செய்து வருகிறது.

நாம் கூடி வாழ்கிறோம். இந்தக் கூட்டமே சமூகம். சோஷலிஸம் என்றால் சமத்துவம் என்று அர்த்தம். சோஷலிஸ சமூகத்தில் எல்லோரும் சமமாக இருப்பார்கள். ஏழை, பணக்காரன் என்ற பேதம் இராது.

நம் கஷ்டங்களை எல்லாம் சோஷலிஸம் போக்கும். சோஷலிஸத்தை நாம் முதலில் அறிய வேண்டும். அதை ஏற்படுத்தப் பாடுபடவும் வேண்டும்.

நமக்கு ஓட்டு உரிமை இருக்கிறது. சோஷலி ஸத்தை ஏற்படுத்த அதுவே ஆயுதம். அதைச் சரியாக உபயோகிக்க வேண்டும். சோஷலிஸத்தை அறிந்தால் தான் இது முடியும்.

சோஷலிஸம் என்றால் என்ன? அதை எவ்வாறு அடைவது? அதற்காக இதுவரை என்ன செய்திருக்கி றோம்?—இந்தக் கேள்விகளுக்கு இனி விடை தேடுவோம்.

# பொருளடக்கம்

1. மனிதன் கதை

2. சோஷலிஸத்தின் நன்மைகள்

3. இந்தியாவும் சோஷலிஸமும்

4. சோஷலிஸ அமல்

5. நமது பொறுப்பு



உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்-வீணில்
உண்டு களித்திருப்போரை
நிந்தனை செய்வோம்.

விழலுக்கு நீர் பாய்ச்சி
மாயமாட்டோம்-வெறும்
வீணருக்கு உழைத்துடலம்
ஓயமாட்டோம்.

* * *

முப்பது கோடி ஜனங்களின் ஸங்க
முழுமைக்கும் பொது உடைமை,
ஒப்பிலாத ஸமுதாயம்
உலகத்துக் கொரு புதுமை

* * *

எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்தியா மக்கள்,
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்

—பாரதியார்

அத்தியாயம் 1

# மனிதன் கதை

உழைக்காமல் உண்பவன் திருடன். இது



கண்ணன் வாக்கு. எல்லா ஜீவராசிகளும் கடவுளின் உருவங்கள். இது ஹிந்து மதத்தின் முடிவு. ஆண்டவன் முன் எல்லோரும் சமம். இது கிறிஸ்தவ மதத்தின் முடிவு. இஸ்லாத்தின் கருத்தும் இதுவே. இவ்வாறு மதங்கள் எல்லாம் சமத்துவத்தைப் போதிக்கின்றன. பல மஹான்கள் இதையே உபதேசம் செய்தார்கள்.

முன்காலக் கவிஞர்களும் இதைப் பாடினர்கள். இராமாயணத்தில் இதைக் கம்பர் குறிப்பிட்டார். தசரதர் ராஜ்யம் சமதர்ம நாடாக விளங்கியதாம். அங்கு எல்லாரிடமும் நிறைய செல்வம் இருந்ததாம். அதனால் ஏழை, பணக்காரன் என்ற வேற்றுமையே இல்லையாம்.

ஆனால் மதங்களால் சமத்துவம் ஏற்படவில்லை. மதம் காரணமாக உயர்வு, தாழ்வுகளே

முளைத்தன. புலவர்கள் பாட்டாலும் சமத்துவம் வரவில்லை. இவ்வழிகளில் சமத்துவம் ஏற்படவும் முடியாது.

சமூகம் பக்குவமாக வேண்டும். பிறகே சம தர்மம் பிறக்கும். சமத்துவமும் சமூக வரலாறும் சம்பந்தம் உள்ளவை. இந்த வரலாற்றை அறிய வேண்டும். ஆதி கால மனிதர்கள் அநாகரிகமாய் இருந்தார்கள். ஆனால் நாம் நாகரிகமாக இருக்கிறோம். அநாகரிகம் போய் நாகரிகம் எப்படி வந்தது? இதற்குப் பல்லாயிரம் வருஷங்கள் ஆயின. அதுவே சமூக வரலாறு.

இந்தக் கதையை நான்கு கட்டங்களாகப் பிரிக்கலாம். ஆதி காலம், மத்திய காலம், நவீன காலம், சோஷலிஸம் என்பவையே அவை.

I. ஆதிகாலம்

இதை அநாகரிகக் காலம் என்றும் சொல்லலாம். ஆதி கால மனிதர்கள் சிறு சிறு கூட்டங்களாக வசித்தார்கள். அவர்களுக்கு எத்தொழிலும் தெரியாது. வேட்டையாடியே பிழைத்தார்கள். தழைகளை உடுத்தினர்கள். குகையே அவர்களின்வீடு.



காலப் போக்கில் புது விஷயங்களை அவர்கள் அறிந்தார்கள். சட்டி பானை வனைய ஆரம்பித் தார்கள. குடிசை கட்டினார்கள். ஆடு மாடு வளர்த்தார்கள். பயிர் செய்தார்கள். துணி நெய் தார்கள். உலோகங்களைக் கண்டு பிடித்தார்கள். சிறிது வியாபாரமும் செய்தார்கள்.

ஒவ்வொரு கூட்டத்திலும் சொற்பக் கருவி களே இருந்தன. அவை எல்லோருக்கும் பொது வாக இருந்தன. ஆடுமாடுகளும் பொதுவே. பயிர் நிலமும் அப்படியே. எவருக்கும் தனியாக உடைமை இல்லை. எல்லோரும் கூடி உழைத் தார்கள். உழைப்பின் பயனை எல்லோரும் அனுப வித்தார்கள். அவர்களில் உயர்ந்தவர் தாழ்ந்த வர் இல்லை. எல்லோரும் சமமே. இந்நிலைமை ஒரு வித சோஷலிஸம்தான். இதைப் பூர்வீக சோஷ லிஸம் என்று கூறலாம். ஆனால் இந்த சோஷ லிஸம் பின்னால் அழிந்து விட்டது.

அவர்கள் கூட்டங்களாக வாழ்ந்தார்கள் அல்லவா? இந்தக் கூட்டங்கள் இடையே அடிக் கடி சண்டை மூண்டது. சண்டையை நடத்தத் தலைவர்கள் தேவைப்பட்டார்கள். பலவான்களே தலைவர்கள் ஆனார்கள். அவர்களுக்கு அதிகாரமும் கிடைத்தது. அதோடு சேர்ந்த உடைமைகளை

யும் சேர்த்தார்கள். பொது உடைமை போயிற்று. தனி உடைமை வந்தது.

சண்டையில் தோற்றவர்கள் அடிமைகள் ஆயினர். ஜெயித்தவர்களுக்கு அவர்கள் ஊழியம் செய்தார்கள். இவ்விதம் சமத்துவம் மறைந்தது. உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேதம் பிறந்தது. இவர்களுக்கு இடையே பூசலும் ஆரம்பமாயிற்று.

2. மத்திய காலம்

இதைப் பிரபுத்துவ காலம் எனலாம். இக்



காலத்தில் பிரபுக்களின் ஆதிக்கம் ஏற்பட்டது. தடி எடுத்தவன் தண்டல்காரன் என்ற முறை இது. ஆள் கட்டுடன் சிலர் இருந்தார்கள். அவர்கள் ஏராள நிலத்தைச் சுவாதீனப் படுத்தினார்கள். சுற்றுப் பட்டறை ஜனங்களை ஆளவும் ஆரம்பித்தார்கள். இவ்விதம் ஆங்காங்கே பிரபுக்கள் முளைத்தார்கள்.

இந்தப் பிரபுக்கள் இடையே அடிக்கடி சண்டை வந்தது. அதிகப் பலசாலி தலைமைப்பிரபு

ஆனுன். அரசன் என்ற பட்டத்யையும் அவன் பெற்ருன். அவனுக்கு அடுத்த படியில் மற்றப் பிரபுக்கள் இருந்தார்கள்.

பிரபுக்களின் கீழே பலவகை விவசாயிகள் இருந்தார்கள். எல்லோருக்கும் கீழே அடிமைகள் இருந்தார்கள். கால்நடைகளைப் போலத்தான் அடிமைகளின் நிலைமை.

மத்திய காலத்தில் கைத்தொழில்களும் இருந்தன. ஒவ்வொரு தொழிலைச் செய்தவர் களும் ஒரு குட்டி ஜாதியாக இருந்தார்கள்.

விவசாய அடிமைகள் இருந்தார்கள் அல்லவா? அவர்கள் விடுதலை பெறக் கலகம் செய்தார்கள். கிராமத்தை விட்டு நகரத்துக்கு ஓடினுர்கள். நகரத்தில் அவர்கள் வியாபாரம் செய்ய ஆரம்பித்தார்கள். கைத்தொழில் சாலை களையும் துவக்கினுர்கள். வேறு பலர் இவற்றில் கூலிக்கு வேலை செய்தார்கள்.

நாளுக்கு நாள் வியாபாரம் வளர்ந்தது. உள் ளூர் வியாபாரம் உள் நாட்டு வியாபாரமாகப் பெருகியது. பிறகு வெளிநாடுகளுடன் வியாபாரம் ஆரம்பமாயிற்று.

இந்தியாவுக்கு ஐரோப்பியர் கடல் வழியைக் கண்டுபிடித்தார்கள். அமெரிக்கா என்ற கண்டத்

த்தையும் கண்டுபிடித்தார்கள். இந்நாடுகளுடன் அவர்களது வியாபாரம் பெருகியது. ஆனால் பண் டங்கள் போதவில்லை. கைத்தொழில்கள் குறை வான பண்டங்களையே தயாரித்தன.

அதிகச் சாமான்களை எப்படி உற்பத்தி செய் வது? அறிவாளிகள் இதை ஆராய்ந்தார்கள். அதன் பலனாகப் புது இயந்திரங்கள் தோன்றின. ஒரு புதிய காலமும் பிறந்தது. அதுவே நவீன காலம்.

3. நவீன காலம்

சுமார் 250 வருஷங்களுக்கு முன் நவீன காலம் பிறந்தது. அது மேற்கு நாடுகளில்தான் முதலில் தோன்றியது. மேற்கு நாட் டார் நீராவி விசையைக் கண்டு பிடித்தார்கள். நீரைக் காய்ச்சினால் நீராவி வருகிறது.



அதன் மூலம் இயந்திரத்தை ஓட்டலாம். பிறகு பெட்ரோல், மின்சாரம் என்ற விசைகள் வந்தன. கடைசியாக அணு விசை வந்திருக்கிறது.

விசையால் இயங்கும் இயந்திரங்களையும் அவர்கள் கண்டுபிடித்தனர். நூற்பதற்கு ஒரு இயந்திரம், நெய்வதற்கு ஒரு இயந்திரம். இவ்

விதம் ஒவ்வொரு தொழிலுக்கும் இயந்திரம் வந்தது. பண்டங்களை இயந்திரம் வேகமாகத் தயாரித்தது. அதிகமாகவும் தயாரித்தது.

ரயில், விசைக்கப்பல், கார், விமானம் முதலியவையும் வந்தன. இவை சாமான்களைப் பல இடங்களுக்கு வேகமாகக் கொண்டுபோகின்றன. தூரம் குறைந்து விட்டது. பல நாட்டாரும் நெருங்கி உறவாடுகிறார்கள்.

மனிதன் வரலாற்றில் இந்த நவீன காலம் முக்கியமானது. அது பல அதிசயங்களை 250 வருஷங்களில் செய்திருக்கிறது. முன்பு பல்லாயிரம் வருஷங்களில் கூட இவ்வளவு முன்னேற்றம் ஏற்படவில்லை.

இயந்திர ஆலைகள் ஆங்காங்கே ஏற்பட்டன. கிராமக் கைத் தொழில்களால் இயந்திரத்துடன் போட்டி போட முடியவில்லை. கைத் தொழில்கள் நசித்தன. கைத் தொழிலாளிகளின் பிழைப்புப் போயிற்று. அவர்கள் நகர இயந்திர ஆலையில் வேலை தேடினர். பல்லாயிரம் கிராமவாசிகள் நகரத்துக்கு ஓடினர். கிராமங்கள் சீர்கெட்டன.



முன்பு கைத் தொழில் சாலைகளைச் சிலர் நடத்தினர் அல்லவா? அவர்களே இயந்திர ஆலைகளை முதலில் தொடங்கினர். இயந்திர ஆலையில் முதல் போட்டவரே எஜமான். லாபம் எல்லாம் முதலாளிக்குத்தான். அவர் செல்வம் நாளுக்கு நாள் அதிகரித்தது. செல்வத்தோடு அந்தஸ்தும் வந்தது, அந்தஸ்தோடு அதிகாரமும் வந்தது. பழைய பிரபுக்களின் அதிகாரம் மறைந்தது. அவர்கள் புது முதலாளிக்குப் பணிந்தனர். அதனால் நவீன காலத்தை முதலாளிக் காலம் என்று சொல்லலாம்.

முன்பு கைத் தொழிலாளர் சுதந்திரமாய் இருந்தார்கள். ஆலைத் தொழிலாளருக்குச் சுதந்திரம் இல்லை. இவர்கள் முறிச்சீட்டு இல்லாத அடிமைகளே. இவர்களுடைய க்ஷேமத்தில் முதலாளிக்கு அக்கறை இல்லை. இவர்கள் குறைந்த கூலிக்கு அதிக வேலை செய்ய வேண்டும். தமக்கு அதிக லாபம் கிடைக்க வேண்டும். இதில்தான் முதலாளிக்கு அக்கறை. லாபம் குறைந்தால் பல தொழிலாளருக்கு வேலை போய்விடும்.

உழைப்பது தொழிலாளர்கள். உழைப்பின் பலன் அவர்களுக்கு இல்லை. பசியும் பிணியும் அவர்களை வாட்டுகின்றன. உழைப்பின் பலனை

முதலாளியே அனுபவிக்கிறார். முதலாளியின் செல்வம் பெருகுகிறது. தொழிலாளரின் கஷ்டமும் பெருகுகிறது. கஷ்டத்தை நீக்க அவர்கள் வழி தேடுகிறார்கள். முதலாளிகள் ஒரு சிலரே. தொழிலாளரோ பல கோடிப்பேர். தொழிலாளர் அனைவரும் ஒன்று சேர்கிறார்கள். ஒன்று சேர்ந்து முதலாளி முறையை ஒழிக்கிறார்கள்.



## 4. சோஷலிஸம்

முதலாளி முறைக்குப் பதில் சோஷலிஸ முறை வருகிறது. சோஷலிஸத்தில் முதலாளி கிடையாது. நிலமும் தொழிற்சாலைகளும் யாருக்கும் சொந்தம் அல்ல. சமூகம் முழுதுக்கும் அவை சொந்தம். எல்லோரும் உழைக்க வேண்டும். எல்லோரும் உழைப்பின் பலனை அடைவர். உழைக்காதவனுக்கு உணவு கிடைக்காது.

சோஷலிஸத்தில் தனி உடைமை இராது. சொந்தச் சொத்தே கிடையாது என்று இதற்கு அர்த்தம் இல்லை. ஒருவருக்குச் சொத்து இருக்கலாம். ஆனால் அதைக் கொண்டு பிறரிடம் வேலை வாங்க முடியாது. பிறர் உழைப்பைத்

திருட முடியாது. தனி உடைமை ஒழியும் என்பதற்கு இதுவே அர்த்தம்.

ஆதிகாலம் முதல் முதலாளி காலம் முடிய ஒரு குறை இருந்து வருகிறது. உள்ளவன், இல்லாதவன் என்ற பேதமே அக்குறை. இக் குறையினல் அடிக்கடி பூசல் ஏற்படுகிறது. அதனல் ஒரு காலம்மாறி இன்னென்று வருகிறது. சோஷலிஸத்தில் இந்தக்குறை நீங்கும். அதனல் ஜனங்கள் இடையே பூசல் விளையாது. சோஷ லிஸம் சிரஞ்சீவியாக இருக்கும். அதாவது மனிதர்கள் எப்போதும் சந்தோஷமாக வாழ் வார்கள்.

இந்திய சமுகம்

இதுவரை மனித வரலாற்றைப் படித்தோம். இதில் நம் நாட்டின் நிலைமை என்ன?

மேற்கு நாடுகளில் நவீன காலம் முதலில் வந்தது. அப்போது இந்தியா உறங்கி விட்டது. இந்தியாவில் மத்திய காலமே நீடித்தது. மத்திய காலத்தை நவீன காலம் ஜெயித்தது அல்லவா? அதே போல் மத்திய கால இந்தியாவை நவீன பிரிட்டன் ஜெயித்தது. பிரிட்டனுக்கு இந்தியா வெகு காலம் அடிமையாக இருந்தது.

பின்னர் இந்தியா விழித்துக் கொண்டது. பிரிட்டிஷ் ஆட்சி முடியும் சமயத்தில் இங்கு

நவீன காலம் வந்தது. அதாவது இயந்திரத் தொழில்கள் ஏற்பட்டன. சில பெரிய முதலாளிகள் தோன்றினர்கள்.

ஒன்பது வருடங்களுக்கு முன் இந்தியா சுதந்திரம் பெற்றது. ஆனல் இன்னமும் நவீன காலம் இங்கு பூராவாக வரவில்லை. நவீன காலம் பூர்த்தியானல்தானே சோஷலிஸம் வரும்? ஆனல் அதற்குள்ளேயே சோஷலிஸத்தை நாடுகிறோம். இது பொருத்தமா? பொருத்தம் தான்.



இதற்கு ஒரு உதாரணம். இராமன் என்பவன் அடிமேல் அடி எடுத்து வைத்து நடக்கிறன்: எட்டு மணி நேரத்தில் அவன் ஒரு மைல் போகிறன். அது வரை கிருஷ்ணன் என்பவன் உட்கார்ந்தே



இருக்கிருன். இராமன் ஒருமைல் போன பின்பு கிருஷ்ணன் எழுந்திருக்கிருன். இராமனைப் போல அவன் மெதுவாக நடக்கவில்லை. அதிவேகமாக ஓடுகிருன். ஒரு மணி நேரத்தில் அவன் ஒரு மைலுக்கு மேல் ஓடிவிடுகிருன்.

கிருஷ்ணனைப் போலவே இந்தியாவும் செய்யவேண்டும். மேற்கு நாடுகள் முன்னேற 250 வருடங்கள் ஆயின. இந்தியா 25 வருடங்களில் அந்நாடுகளை எட்டிப் பிடிக்கலாம். ஆனல் நாம் வேகமாக முன்னேற வேண்டும். இது சாத்தியமே என்று நேருஜி சொல்கிருர். முன்னேறிய நாடுகளின் அனுபவம் நமக்குத் துணை செய்யும் என்று அவர் கூறுகிருர். இந்த நம்பிக்கையுடன் தான் சோஷலிஸத்தை ஆரம்பிக்கிருேம்.

அத்தியாயம் 2

# சோஷலிஸத்தின் நன்மைகள்

உலகில் தீமை நிலைக்காது. தீமையை மக்கள் ஒழிப்பர். நன்மையே நிலைக்கும். முதலாளி முறையால் சமூகத்துக்குத் தீமைகள் விளைகின்றன. சோஷலிஸத்தால் நன்மைகளே விளைகின்றன. அதனால்தான் முதலாளி முறை மறையும், சோஷலிஸம் நிலைக்கும்.

சில நாடுகளில் முதலாளி முறை முற்றிவிட்டது. அங்கு அதன் தீமைகள் தெளிவாகத் தெரிகின்றன. இந்தியாவில் முதலாளி முறை வலுக்கவில்லை. எனினும் அதன் தீமைகளை அறிவது நல்லது. முதலாளி முறை வலுக்காமல் தடுக்க இது உதவும். சோஷலிஸத்தின் நன்மைகளை அறிவதும் அவசியம். சோஷலிஸத்தை ஏற்படுத்த இந்த அறிவு உதவும்.

முதலாளி முறையில் ஒரு சிலரே சுகமாக வாழ்கிறார்கள். அவர்களிடம் தேவைக்கு மேல் பணம் இருக்கிறது. அவர்கள் ஆடம்பரத்தில் பணத்தை



வீணுக்குகிறுர்கள், ஆனுல் ஏராளமான ஜனங்கள் வறுமையில் வாடுகிறுர்கள். உணவு, உடை, வீடு என்ற அவசிய வசதிகள் கூட அவர்களுக்கு இல்லே. இவ்விதம் பலர் நோக, சிலர் சுகிக்கிறுர்கள். சோஷலிஸத்தில் இந்த வேற்றுமை ஒழியும். எல்லோருக்கும் சம வசதிகள் கிடைக்கும்.

முதலாளி முறையில் பலர் உழைக்கிறுர்கள். அதன் பலனே உழைக்காத வேறு சிலரே அனுபவிக்கிறுர்கள். இது நியாயம் அல்ல. சோஷலிஸத்தில் எல்லோரும் உழைப்பார்கள். உழைப்பின் பலனே எல்லோரும் அனுபவிப்பார்கள்.

முதலாளி முறையில் பணமே பிரதானம். பணம் இல்லாதவன் பிணம். ஆனுல் சோஷலிஸத்தில் பணம் முக்கியமல்ல. மனிதனுக்கும், அவன் உழைப்புக்குமே மதிப்பு இருக்கும்.

சமூகத்துக்கு எத்தனேயோ காரியங்கள் தேவை. ஆனுல் அவை நடப்பதில்லே. அதே சமயம் பலர் வேலே இல்லாமல் தவிக்கிறுர்கள். முதலாளி தமக்கு லாபமான காரியத்தையே தொடங்குவான். சோஷலிஸத்தில் இந்த லாப நோக்கம் இல்லே. அவசியமான காரியங்கள் எல்லாம் நிறைவேற்றப்படும். அதனுல் ஏராளமான பேருக்கு வேலே கிடைக்கும். வேலே

இல்லாத் திண்டாட்டம் ஒழியும். அதோடு நாடும் வேகமாக முன்னேறும்.

முதலாளி முறையில் எதுவும் ஸ்திரமாக இல்லை. ஒரு சமயம் பண்டங்களுக்குப் பஞ்சம் ஏற்படுகிறது. இன்னொரு சமயம் பண்டங்கள் விற்காமல் தேங்குகின்றன. பஞ்ச காலத்தில் பண்டங்களை முதலாளி பதுக்குகிறார். அவற்றைக் கொள்ளை லாபத்திற்கு விற்கிறார். பண்டங்கள் அதிகமாகத் தேங்குவதை "நெருக்கடி" என்கிறோம். ஜனங்களிடம் பணம் இல்லாததே நெருக்கடிக்குக் காரணம். அவர்களுக்கு இச் சாமான்கள் தேவைதான். ஆனால் வாங்கச் சக்தி இல்லை. ஜனங்களுக்கு இவற்றை முதலாளி தானம் செய்வதில்லை. பண்ட உற்பத்தியை அவர் குறைக்கிறார். அதிகமாக உள்ள பண்டங்களை அவர் அழிக்கிறார். பண்டங்களைக் குறைத்து அவற்றின் விலையை உயர்த்துகிறார். சில மேற்கு நாடுகளில் ஏராளமான தானியங்களைக் கடலில் கொட்டினார்கள். மூட்டை மூட்டையாகக் காப்பிக் கொட்டையை எரித்தார்கள். பருத்தித் தோட்டங்களில் பூச்சியை



விட்டு அழித்தார்கள். சுமார் 20 வருடத்துக்கு முன் நாமும் இந்த நெருக்கடியை அனுப வித்தோம். அப்போது தானிய விலேகள் சரிந்தன. நம் விவசாயிகள் ஒட்டாண்டிகள் ஆனூர்கள். பல லட்சம் பேர் வேலே இன்றித் தவித்தார்கள். கடந்த 130 வருடங்களில் 12 தடவை இது போல நெருக்கடி ஏற்பட்டது.

சோஷலிஸத்தில் இந்த நெருக்கடி வரவே வராது. ஏனெனில் திட்டம் போட்ட முறை அது. அதாவது, என்ன பண்டங்கள், எவ்வளவு தேவை என்று திட்டம் போடுவோம். அந்தத் திட்டப்படி பண்டங்களைத் தயார் செய்வோம். இப் பண்டங்கள் பூராவையும் உபயோகித்து விடு வோம். ஜனங்களுக்கு ஏராளமான பண்டங்கள் தேவை. அதனுல் பண்டங்களே அதிகமாகத் தயாரிக்க இடம் இருக்கிறது.

முதலாளி நாட்டில் அதிகமான பண்டங்கள் உற்பத்தி ஆகின்றன. அவற்றை விற்கச் சந்தை வேண்டும். இதற்காக முன்னேருத நாடுகளே முதலாளி நாடு கைப் பற்றுகிறது. அடிமை நாட்டில் அது தன் பண்டங்களே இஷ்டம்போல் விற்கிறது. முதலாளி நாட்டு ஆலேக்கு மூலப் பொருள்கள் தேவை. இவற்றை அது அடிமை நாட்டிலிருந்து மலிவாகக் கடத்துகிறது. இவ்

விதம் அடிமை நாட்டின் செல்வம் கரைகிறது. பிரிட்டிஷாரிடம் நம் நாடு இப்படித்தான் கஷ்டப்பட்டது.



இவ்விதம் நாடு பிடிக்க முதலாளி நாடுகள்போட்டி போடுகின்றன. போட்டி முற்றி யுத்தம் வளருகிறது. கடந்த50 வருடத்தில் இரு உலக யுத்தங்கள் இவ்வாறு மூண்டன. அவற்ருல் கணக்கற்ற உயிர் நஷ்டம் ஏற்பட்டது. அளவற்ற பொருள் சேதமும் விளைந்தது. சில முதலாளிகள் தம் லாபத்துக்காக உலகத்தையே இவ்வாறு வதைக்கிருர்கள்.

பிற நாடுகளைச் சுரண்டும் முதலாளிகள் சோஷலிஸத்தில் இல்லை. அதோடு சோஷலிஸம் திட்டம்போட்டு வேலை செய்கிறது. இதை முன்பே பார்த்தோம். இக் காரணங்களால் அடிமை முறை சோஷலிஸத்துக்கு அவசியம் இல்லை. வேற்று நாட்டுடன் சோஷலிஸ நாடு வியாபாரம் செய்யும். ஆனல் இதில் சுரண்டல் இராது. வியாபாரத்தால் இரு நாடுகளுக்குமே நன்மை ஏற்படும். அடிமை முறை இல்லாததால் போட்டியோ யுத்தமோ வராது. உலகில் நிரந்தர சமாதானம் ஏற்படும். மனிதர்கள் பயமின்றி வாழ்வார்கள்.

முதலாளி முறையால் ஜனங்களுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது. அதனால் இம் முறையை அவர்கள் எதிர்ப்பர். இதைத் தடுக்க முதலாளி முறை கோர சொரூபம் எடுக்கும். இந்த உருவத்துக்குப் "பாசிஸம்" என்று பெயர். தனி மனிதனின் சர்வாதிகாரமே பாசிஸம். முதலாளிகளை இந்தச் சர்வாதிகாரி பாதுகாப்பார். ஜனங்களை அவர் ஒடுக்குவார். அவர்களுக்கு இன வெறியை ஊட்டுவார். 'நம் இனம் உயர்ந்தது மற்றவர்கள் இனம் தாழ்ந்தது. மற்றவர்களை அடிமைப்படுத்த வேண்டும்' என்று பிரசாரம் நடக்கும். யுத்தத்துக்கு ஏராளமான ஆயுதங்களையும் சர்வாதிகாரி தயாரிப்பார். பிழைப்பற்ற ஜனங்களை அவர் பட்டாளத்தில் சேர்ப்பார். இந்த யுத்த முயற்சியால் யுத்தமே வந்து விடும். பத்து ஆண்டுகளுக்கு முன் ஒரு பெரிய யுத்தம் நடந்தது. அதைப் பாஸிஸ நாடுகளே ஆரம்பித்தன.



இனவெறி மாத்திரம் அல்ல, ஜனங்களை வேறு வழிகளிலும் முதலாளிகள் ஏமாற்றுவர். மதவெறி, ஜாதி பேதம், பாஷை வெறி, மாகாணப் பித்து முதலியவற்றை அவர்கள் கிளப்பிவிடுவர். நம் நாட்டில் பிரிட்டிஷார் இதை எல்லாம் செய்

தார்கள். அதன் தீமையை நாம் இன்னமும் அனுபவிக்கிறோம். மத வேற்றுமையால் நம் நாடே பிரிவினை செய்யப்பட்டது.

எல்லா மனிதர்களும் சமம் என்பது சோஷலிஸத்தின் சாரம். சோஷலிஸத்தில் ஒரே இனம் தான் உண்டு. அதுவே உழைப்பாளிகள் இனம். எல்லாரும் உழைப்பார்கள். எல்லாரும் சுபிட்சமாய் வாழ்வார்கள். பிரிவினை பேசும் முதலாளிகள் அங்கு இல்லை. அதனால் நாம் மேலே பார்த்த வேற்றுமைகள் பொசுங்கிப்போகும்.

முதலாளி முறையில் நகரம் வளர்கிறது. கிராமம் நசிக்கிறது. விவசாயத்தை ஆலைத் தொழில் சுரண்டுகிறது. சோஷலிஸத்தில் இரண்டுக்கும் சம அந்தஸ்து இருக்கும். ஆலைத் தொழிலைப் போலவே விவசாயமும் பெரிய அளவில் நடக்கும். அதனால் கிராமங்களின் நிலை உயரும்.

மூளை வேலை தேக உழைப்பு இரண்டும் சமூகத்துக்கு அவசியம். ஆனால் முதலாளி முறையில் மூளை வேலைக்கே அதிக மதிப்பு. அதற்கே அதிக ஊதியம். தேக உழைப்பாளியை மட்டமாக நடத்துகிறார்கள். சோஷலிஸத்தில்



இந்த வேற்றுமை இருக்காது. இருவகை உழைப்பாளிகளும் சமமாக இருப்பர்.

மனிதனை உயர்ந்தவன் ஆக்கக் கலைகள் அவசியம். ஆனால் முதலாளி முறையில் கலைகளும் வியாபாரப் பொருட்கள் ஆகிவிட்டன. லாபத்துக்காகக் கலைகளை முதலாளிகள் கெடுக்கிறார்கள். காமம் முதலிய மிருக உணர்ச்சிகளை அவர்கள் தூண்டிவிடுகிறார்கள். சோஷலிஸத்தில் கலைகள் பரிசுத்தமாக இருக்கும். அவை மக்களின் அறிவையும் குணத்தையும் வளர்க்கும். அரசாங்கமே கலைகளைப் போஷிக்கும். எல்லோருக்கும் கல்வி போதிக்கப்படும். அதனால் எல்லோரும் உயர்ந்த கலைகளை ரசிப்பர். இலக்கியம், சங்கீதம், நாடகம், நாட்டியம், சினிமா, ஓவியம் முதலிய கலைகள் தழைத்து வளரும்.



முதலாளி முறையில் பெண்களைவிட ஆண்களுக்கே அதிக மதிப்பு. சில முதலாளி நாடுகளில் பெண்கள் நாகரிகமாய் இருக்கலாம். ஆனால் ஆண்களோடு அவர்களுக்குச் சமத்துவம் இல்லை. சோற்றுக்காகச் சில பெண்கள் உடலைக்கூட

விற்கிறார்கள். எல்லா முதலாளி நாடுகளிலும் இந்த விபசாரம் உண்டு. அதோடு முதலாளி முறையில் திருமணம் வியாபாரந்தான். திரும ணத்தில் அன்புக்குப் பதில் பணமே முக்கிய மாக இருக்கிறது.

ஆண்களோடு பெண்கள் "சரி நிகர் சமான மாக" இருக்கவேண்டும். இவ்வாறு பாரதியார் பாடினார். சோஷலிஸத்தில் இது கை கூடும். பெண்களுக்கு எவ்வித வில்லங்கமும் இராது. ஆண்களின் உரிமைகள் எல்லாம் அவர் களுக்கும் உண்டு. அவர்கள் தங்களுக்குப் பிடித்தமான வேலையைச் செய்யலாம். கண்ணிய மாகச் சம்பாதிக்கலாம். உடலை விற்கவேண்டிய அவசியம் இராது. மனத்திற்குப் பிடித்தவரை ஒரு பெண் மணக்கலாம். இப்போது பெண்களின் சக்தி வீணாகிறது. அவர்கள் விடுதலை பெற்றால் அந்தச் சக்தி சமூகத்துக்குப் பயன்படும். பெண்கள் முன்னேற சமூகமும் முன்னேறும்.



முதலாளி முறை, குழந்தைகளைக் கூடப் பட்சபாதமாக நடத்துகிறது. பணக்காரக் குழந்தைகளுக்கே எல்லா வசதிகளும் உண்டு. ஏழைக் குழந்தைகளுக்குப் போதிய உணவு

இல்லை. கந்தலை அவை உடுத்துகின்றன. படிக்கவும் வசதியில்லை. சில ஏழைச் சிறுவர்கள் பிழைப்புக்காகத் தீய காரியங்களையும் செய்கிறார்கள். சோஷலிஸத்தில் இந்தக் கோரம் இருக்காது. எல்லாக் குழந்தைகளுக்கும் எல்லா வசதிகளும் கிடைக்கும். இதற்கு அரசாங்கமே பொறுப்பு ஏற்கும்.

இதே போல் அனாதைகளையும் அரசாங்கம் இரட்சிக்கும். அவர்களில் சக்தி உள்ளவர்களுக்கு வேலை கிடைக்கும். சக்தி இல்லாதவர்களுக்கு இலவச உணவும் வசதிகளும் கிடைக்கும். அதனால் சோஷலிஸத்தில் பிச்சைக்காரரே இருக்க முடியாது.



கொலை, களவுச் செய்திகளைத் தினசரி கேட்கிறோம். இவை பெரும்பாலும் பணம் காரணமாக நடக்கின்றன. சோஷலிஸத்தில் சொத்துக்கு மதிப்பு இல்லை. எல்லோருக்கும் பிழைப்புக் கிடைக்கும். அதோடு சோஷலிஸம் மனிதனை உயர்ந்தவன் ஆக்கும். அதனால் குற்றங்கள் குறைந்து மறையும். போலீஸ் செலவும் குறையும். அந்தப் பணத்தை எல்லாம் ஆக்கமான காரியத்துக்குப் பயன்படுத்தலாம்.

முதலாளி முறையில் பலத்த போட்டி உண்டு. வியாபாரம், தொழில்கள் எல்லாவற்றி லும் போட்டிதான். இந்தப் போட்டியில் சில பெரிய முதலாளிகளே ஜெயிப்பர். அவர்கள் கூடிப்பேசி சாமான்களின் விலையை அனுவசிய மாக உயர்த்துவார்கள். இவ்விதம் அதித லாபம் சம்பாதிப்பார்கள். இதற்கு ஏகபோக உரிமை என்று பெயர். சோஷலிஸத்தில் போட்டியோ ஏகபோகமோ கிடையாது.

இவ்விதம் சோஷலிஸம் பல நன்மைகளைத் தரும். நம் நாட்டில் பல கஷ்டங்கள் இருக்கின் றன. இவற்றுக்கு ஒரே பரிகாரம்தான் உண்டு. அதுதான் சோஷலிஸம். நாம் மேலே படித்தவை இதையே காட்டுகின்றன.

அத்தியாயம் 3

# இந்தியாவும் சோஷலிஸமும்

**சோ**ஷலிஸக் கருத்து நமக்குப் புதிதல்ல. கடந்த ஒரு தலைமுறையாக நம் தலைவர்களுக்கு அதில் நாட்டம் உண்டு. ஆனால் முன்பு அந்நிய ஆட்சி இருந்தது. அதை முதலில் ஒழிக்க வேண்டியிருந்தது. சுதந்திரம் இல்லாமல் சோஷலிஸம் ஏற்படாது. இப்போது இந்தியா சுதந்திரம் பெற்று விட்டது. சோஷலிஸத்துக்கு நாடு பக்குவமாகி விட்டது.

மஹாத்மா காந்தி நமக்கு விடுதலை தந்தார். அவரே சோஷலிஸத்தையும் போதித்தார்.



தேவைக்கு மேல் பண்டங்களை வைத்திருப்பவன் "திருடன்" என்று அவர் சொன்னார். "உழைப்பவனுக்கே நிலமும் எல்லாச் சொத்துக்களும் சொந்தம்" என்று அவர் கூறினார். செல்வர்களுக்குச் செல்வம் சொந்தம் அல்ல. மக்களுக்கே அது சொந்தம். செல்வர்கள் வெறும் தர்மகர்த்

தாக்கலே. இதுவும் காந்திஜியின் உபதேசம் தான். ஏழைகளுக்காக அவர் அனவரதமும் பாடு பட்டார். ஹரிஜனங்களுக்கு அரிய சேவை செய்தார். ஏழைகளின் நன்மைக்காகப் பல திட்டங்களை அவர் நடத்தினர். இவற்றை நிர் மாணத் திட்டங்கள் என்று கூறுகிறேம்.

காங்கிரஸ் கட்சி 1930-ஆம் ஆண்டில் உரி மைச் சாசனம் ஒன்றை வெளியிட்டது. சில சோஷலிஸக் கருத்துக்கள் அதில் இருந்தன. பின்பு காங்கிரஸ் தீர்மானங்களில் வேறொரு பதம் இடம் பெற்றது. "கூட்டுறவுப் பொதுநல சமூகம்" என்பதே அந்தப் பதம். எல்லோரும் சுகமாய் இருக்கவேண்டும் என்பது இதன் பொருள்.

பின்னர் நமது அரசியல் சட்டம் வந்தது.




எல்லோரும் சமம் என்ற கருத்து அதன்முதல் பக் கத்திலேயே உள்ளது. இச்சட்டத்தில் 'ஜீவாதார உரிமைகள்' என ஒரு அத்தியாயம் இருக்கிறது. அதில் சோஷலிஸத்தின் சில அம்சங்களைக் காணலாம். "வழிகாட்டிக் கொள்கைகள்" என்று மற்றொரு அத்தியாயம் உண்டு. அவை பெரும்பாலும் சோஷலிஸக் கொள்கைகளே.

1948-ஆம் வருஷத்தில் இந்திய சர்க்கார் ஒரு தீர்மானத்தை வெளியிட்டது. தொழில் கொள்கைத் தீர்மானம் என்பது இதன் பெயர். சில முக்கிய தொழில்களை அரசாங்கமே நடத்தும் என இது அறிவித்தது.* சோஷலிஸத்தில் தொழில்கள் அரசாங்கத்திடம் இருக்கும். அதற்கு ஆரம்ப முயற்சியே இந்தத் தீர்மானம். கூட்டுறவு முறைக்கும் இது ஆதரவு அளிக்கிறது. குடிசைத் தொழில்கள் கூட்டுறவு முறையில் நடக்க உதவி கிடைக்கிறது. முதலாளி முறை வளராமல் கூட்டுறவு முறை தடுக்கும்.

சோஷலிஸத்துக்கு மற்றொரு இயக்கமும் உதவுகிறது. அதுவே பூமிதான இயக்கம். அதை ஆச்சாரிய விநோபாபாவே ஆரம்பித்தார். தானமாக நிலங்களை அவர் பெறுகிறார். நிலம் இல்லாதவர்களுக்கு அவற்றைக் கொடுக்கிறார். இவ்விதம் ஏராள நிலம் வசூலாகிறது. ஆனால் நில வசூலை விட அதன் தத்துவமே முக்கியமானது. நிலம் தனி ஒரு



* இப்புத்தகம் எழுதப்பெற்றபின் புதிய தொழில் கொள்கைத் தீர்மானம் வெளியாயிற்று. அது மேலும் பல தொழில்களை அரசாங்கம் நடத்த வழி செய்கிறது.

வருக்குச் சொந்தம் அல்ல. சமூகம் முழுதுக்குமே நிலம் சொந்தம். இதுவே அந்தத் தத்துவம். இது சோஷலிஸத் தத்துவமே.

சோஷலிஸத்தில் திட்டம் போட்டு நாடு முன்னேறும். இதை முன்பு படித்தோம். நாமும் ஒரு ஐந்து வருஷத் திட்டத்தை நிறைவேற்றி னோம். இப்போது இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தைத் தொடங்கியுள்ளோம்.

இவ்வாறு சோஷலிஸக் கருத்துப் பலவிதங் களில் நடமாடி வந்திருக்கிறது. ஆனால் சோஷ லிஸம்தான் வேண்டும் என்ற தெளிவு ஏற்பட வில்லை. ஓராண்டுக்கு முன்தான் இந்தத் தெளிவு பிறந்தது. அப்போது ஆவடியில் காங்கிரஸ் மகாநாடு நடந்தது. சோஷலிஸ சமூகம் ஏற்பட வேண்டும் என்று அம்மகாநாடு தீர்மானித்தது.

அந்தத் தீர்மானத்தின் சாரம் வருமாறு:- (1) முக்கியமான தொழில்களைச் சமூக உடமை ஆக்க வேண்டும். (2) பண்டங்களின் உற் பத்தியைப் பெருக்க வேண்டும். (3) பண்ட உற்பத்தியே உண்மையான செல்வம். இச் செல்வத்தை மக்களுக்கு நியாயமாகப் பகிர்ந்து கொடுக்க வேண்டும்.

காங்கிரஸ் ஆளும் கட்சி. அதன் முடிவு சர்க்காரின் முடிவு ஆகும். தவிர லோக் சபையும் சோஷலிஸ தீர்மானத்தை நிறைவேற்றியது. நாடு முழுதுக்கும் சட்டம் இயற்றும் சபை இது. பல கட்சிப் பிரதிநிதிகள் அதில் உள்ளனர். ஆகவே அதன் முடிவு மக்களின் முடிவாகும்.

அத்தியாயம் 4

# சோஷலிஸ அமல்

நமது சோஷலிஸம் ஏட்டுச் சுரைக்காய் அல்ல. அது செயலிலும் வருகிறது. சோஷலிஸத்தைச் சக்கார் உருவாக்கி வருகிறது. அதற்காக இதுவரை நடந்துள்ள காரியங்களைப் பார்ப்போம்.

விவசாயம்

விவசாயத்தைச் சர்க்கார் பேணி வளர்க்கிறது. கடந்த ஐந்து வருஷங்களில் பல நீர்ப்பாசன வேலைகள் நடந்துள்ளன. இவற்ருல் புதிதாக சுமார் 70 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றது. வேறு இரு திட்டங்கள் விவசாயிக்கு உதவுகின்றன. தேசிய விஸ்தரிப்புத் திட்டமும் சமுதாய அபிவிருத்தித் திட்டமுமே அவை.



இத்திட்டங்களால் விவசாய உற்பத்தி அதிகரித்து வருகிறது. பாடுபடுபவர்களுக்கு இந்த உற்பத்தியில் அதிகப் பங்கு கிடைக்க

வேண்டும். அதற்காகச் சீர்திருத்தங்களைச் சர்க்கார் இயற்றி வருகிறது.

முதலாவதாக ஜமீன்தாரிமுறை ஒழிக்கப்பட்டது. நிலத்தில் ஜமீன்தார்களுக்கு உரிமை கிடையாது. இருந்தாலும் அவர்கள் உரிமை பாராட்டி விவசாயிகளைச் சுரண்டினர். சர்க்கார் இந்தப் போலி உரிமையை ஒழித்து விட்டது. ஜமீன் விவசாயிகள் விடுதலை பெற்றுவிட்டார்கள்.

வார, குத்தகை சாகுபடியாளருக்கும் சர்க்கார் உதவுகிறது. அவர்களிடம் நிலச்சுவான் அதிக மேல்வாரம் கேட்க முடியாது. ஆங்காங்கே நியாய மேல்வாரத்தைச் சர்க்கார் நிர்ணயிக்கிறது. அதோடு சாகுபடியாளரைத் திடீரென நிலத்திலிருந்து வெளியேற்ற முடியாது. இதைத் தடுக்கச் சட்டம் இருக்கிறது.

ஏராள விவசாயத் தொழிலாளருக்கு நிலம் இல்லை. இவர்களில் பலர் ஹரிஜனங்கள். இவர்களுக்கு ஸ்திரவேலை வேண்டும். நியாய ஊதியமும் வேண்டும். சில பிரதேசங்களில் இதற்கு ஏற்பாடு செய்



யப்பட்டிருக்கிறது. தரிசு நிலங்களை இவர்களுக்குச் சர்க்கார் ஜாரி செய்கிறது. இலவச மனைக்

கட்டுகளையும் கொடுக்கிறது. குடிசைத் தொழில்களிலும் இவர்களை ஈடுபடுத்தலாம். அதன் மூலம் இவர்களின் வருமானம் உயரும். இதற்கும் முயற்சி நடக்கிறது.

சிலரிடம் தேவைக்கு மேல் நிலம் இருக்கிறது. ஆனால் பல விவசாயிகளிடம் நிலம் இல்லை. இதனால் பூசல் ஏற்படுகிறது. விவசாயம் தடைபடுகிறது. ஒருவரிடம் இவ்வளவு நிலம் தான் இருக்கலாம் என்று வரம்பு கட்டவேண்டும். அதற்கு அதிகமாக உள்ள நிலத்தை ஏழைகளுக்குத் தரவேண்டும். இதற்குச் சர்க்கார் திட்டம் போட்டு வருகிறது.

நிலப் பிரபுக்கள் ஆதிக்கம் செலுத்துவது பழங்கால முறை. அது நவீன காலத்துக்குப் பொருந்தாது. இதை முதல் அத்தியாயத்தில் படித்தோம். மேலே கூறிய சீர்திருத்தங்கள் இந்தப் பழைய முறையை மாற்றும்.

### தொழில்கள்

பல தொழிற்சாலைகளைச் சர்க்கார் ஆரம்பித்திருக்கிறது. ரசாயன உரத் தொழிற்சாலை இவற்றுள் ஒன்று. பீஹார் ராஜ்யத்தில், சிந்திரி என்ற ஊரில் இது உள்ளது. இதை ஏற்படுத்த 23கோடி ரூபாய் செலவாயிற்று. வருஷத்திற்கு

மூன்றரை லட்சம் டன் உரத்தை இந்த ஆலை தயாரிக்கும்.

இன்னொன்று சித்தரஞ்சன் தொழிற்சாலை. இது வங்காளத்தில் இருக்கிறது. இது வருஷம் 120 ரயில் என்ஜின்களைத் தயாரிக்கும். இந்த ஆலையை அமைக்க 15 கோடி ரூபாய் செலவாயிற்று.

நமது பெரம்பூரில் ரயில் பெட்டித் தொழிற்சாலை இருக்கிறது. இது வருஷம் 350 உருக்கு ரயில் பெட்டிகளைத் தயாரிக்கும்.



கப்பல் கட்டும் தொழிலையும் சர்க்கார் நடத்துகிறது. ஆகாய விமானப் போக்குவரத்தைச் சர்க்காரே நடத்துகிறது.

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப்படுகிறது. இதற்கு சர்க்கார் ரூ70 கோடி செலவிடும்.

சர்க்கார் ஆலைகள் தயாரிக்கும் வேறு சில பண்டங்கள் வருமாறு:- இயந்திரக் கருவிகள், டெலிபோன் கருவி, டெலிபோன் கம்பி, கிருமி நாச மருந்து, அற்புத மருந்தான பெனிஸிலின்.

இத்தொழிற்சாலைகளில் கிடைக்கும் லாபம் சர்க்காரைச் சேரும். இதை ஜனங்களுக்காகச் சர்க்கார் செலவிடுகிறது.

தொழிலாளர்

தொழிலாளருக்குச் சர்க்கார் பல நன்மைகளைச் செய்து வருகிறது. இது அவசியமே. ஏனெனில் பாட்டாளி ராஜ்யமே சோஷலிஸம்.



சம்பளம் ஒரு அளவுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். அப்போதுதான் தொழிலாளர் வாழ முடியும். இதற்கு ஒரு சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. பெரிய ஆலைகளில் இச்சட்டம் அமல் நடக்கிறது. தொழிலாளரிடம் அளவு மீறி வேலை வாங்க முடியாது. வேலை செய்யும் இடம் சௌகரியமாக இருக்க வேண்டும். அவர்களுக்கு ஓய்வும் விடுமுறையும் அவசியம். இதற்கு எல்லாம் சட்டங்கள் உள்ளன.

முதலாளி பண பலத்தால் தொழிலாளரை அடக்க முடியாது. அவர்கள் இடையே தகராறு வந்தால் சர்க்கார் தலையிடுகிறது. சர்க்காரே தகராரைப் பஞ்சாயத்துச் செய்கிறது.

ராஜாங்க இன்ஷ்யூரன்ஸ் என்று ஒரு திட்டம் வந்திருக்கிறது. தொழிலாளருக்கு இது பல விதங்களில் உதவுகிறது. வியாதி காலத்தில் வைத்திய உதவி கிடைக்கும். அதோடு பண சகாயமும் உண்டு. விபத்தில் தொழிலாளி முடமானல் நஷ்ட ஈடு கிடைக்கும். விபத்தில் அவர் இறந்தால் அவர் குடும்பத்துக்குப் பணம் தரப்படும். கோயம்புத்தூரிலும் சென்னையிலும் இத்திட்டம் அமல் நடக்கிறது. பின்னல் எல்லா முக்கிய ஊர்களுக்கும் இது பரவும்.

தொழிலாளர் க்ஷேமநிதி என்று மற்ருெரு ஏற்பாடு இருக்கிறது. மாதா மாதம் தொழிலாளர் சம்பளத்தில் சிறிது இந்த நிதியில் சேரும். அதே போல் முதலாளியும் பணம் கொடுப்பார். இவ்விதம் தொழிலாளர் கணக்கில் பணம் சேமிக்கப்படும். பிற்காலத்தில் இந்நிதியைத் தொழிலாளர் மொத்தமாகப் பெறலாம். சில பெரிய தொழில்களில் இத் திட்டம் நடக்கிறது. பின்னல் எல்லாத் தொழில்களுக்கும் இது பரவும்.

தொழிலாளருக்கு வீடுகள் கட்டித்தர இன்ெருரு திட்டம் உதவுகிறது. இதற்கு முதலாளிகளும் சர்க்காரும் சேர்ந்து பணம் கொடுக்கிருர்கள்.

தொழிலை நிர்வாகம் செய்வதில் தொழிலாளருக்குப் பங்கு இல்லை. இந்த உரிமையையும் அவர்களுக்குக் கொடுக்கச் சர்க்கார் யோசித்து வருகிறது. இப்போது லாபம் எல்லாம் முதலாளிக்குப் போகிறது. இதிலும் தொழிலாளருக்குப் பங்கு கொடுக்கச் சர்க்கார் யோசித்து வருகிறது.

சமூக வசதிகள்

தீண்டாமை பாராட்டுவது குற்றம். அதற்குத் தண்டனை உண்டு. சர்க்கார் இவ்வாறு சட்டம் செய்திருக்கிறது. ஹரிஜனங்களுக்கு விசேஷ சலுகைகள் கிடைக்கின்றன. மற்றவர்களுடன் அவர்கள் சம அந்தஸ்தைப் பெற வேண்டும். இதுவே சர்க்காரின் நோக்கம். ஜாதிமத பேதங்களுக்குச் சர்க்காரில் இடம் இல்லை. நம் அரசியல் சட்டமே இவ்வாறு விதித்திருக்கிறது.

தமிழ் நாட்டில் மதுவிலக்கு அமல் நடக்கிறது.



குடியினால் ஏழைகள் பணம் வீணாகி வந்தது. இப்போது அந்தப் பணம் மிச்சம் ஆகிறது. நாடு பூராவும் மதுவிலக்கு வரப்போகிறது.

பெண்களின் நிலையை உயர்த்தவும் சர்க்கார் முயலுகிறது. இதற்காக ஹிந்துச் சட்டம்

மாற்றப்படுகிறது. சொத்து உரிமை, கார்டியன் உரிமை முதலியவை பெண்ணுக்குக் கிடைத்துள்ளன.

பல பகுதிகளில் சமூக க்ஷேமநலத் திட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. பெண்கள், குழந்தைகளுக்கு இத்திட்டம் உதவுகிறது. வைத்தியம், கைவேலைப் பயிற்சி முதலிய வசதிகள் அவர்களுக்குக் கிடைக்கின்றன.

குற்ற விசாரணைச் சட்டத்தைச் சர்க்கார் திருத்தியிருக்கிறது. விசாரணை முன்போல் இனித் தாமதமாக நடக்காது. அதோடு வழக்குச் செலவும் குறையும். இதனால் ஏழைகளுக்கு நன்மையே.

மகாராஜாக்கள் இனி இருக்கமாட்டார்கள். அந்த முறையைச் சர்க்கார் ஒழித்து விட்டது. யாருக்கும் பிறப்பினால் உயர்வு கிடையாது. இது சோஷலிஸக் கருத்து.

கலாச்சாரம்

கல்வி, கலைகளைச் சர்க்கார் வளர்த்து வருகிறது. எல்லாருக்கும் இலவச, ஆரம்பக் கல்வி அளிப்பது சர்க்காரின் நோக்கம். மேல் படிப்புக்கும் ஏராளமான பள்ளிகள் ஏற்பட்டு வருகின்றன. தொழில் கல்வி நிலையங்களையும் அரசாங்



கம் அமைத்து வருகிறது. முதியோர் கல்விக்கும் சர்க்கார் வசதி செய்திருக்கிறது.

கலைகளை வளர்க்கப் பல கழகங்களைச் சர்க்கார் அமைத்திருக்கிறது. இலக்கியத்துக்கு ஒரு கழகம் இருக்கிறது. நாட்டியம், நாடகம், சங்கீதம் ஆகியவற்றுக்கு வேறு கழகம் இருக்கிறது. சித்திரம், சிற்பம் முதலியவற்றுக்கு மற்ரெரு கழகம் உதவுகிறது. சிறந்த கலைஞர்களுக்கு ராஷ்டிரபதி விருது கொடுக்கிருர். சிறந்த சினிமாப் படங்களுக்குப் பரிசு கொடுக்கிருர்.

நல்ல புத்தகங்களை எல்லாரும் படிக்க வேண்டும். புத்தகம் மலிவாகக் கிடைத்தால்தான் எல்லாரும் வாங்க முடியும். மலிவான நூல்களை ஏராளமாக வெளியிடச் சர்க்கார் ஏற்பாடு செய்து வருகிறது.

நிதி ஏற்பாடுகள்

ஒரு சிலரிடம் பணம் குவியக்கூடாது. சர்க்காரிடம் அதிகப் பணம் சேரவேண்டும். அப்போதுதான் ஜனங்களுக்கு நன்மைகளைச் செய்ய முடியும். சோஷலிஸத்தில் இந்த இரு விஷயங்

களும் அவசியம். இதற்காகச் சர்க்கார் செய்துள்ள ஏற்பாடுகளைப் பார்ப்போம்.

ஜனங்கள் தங்கள் சேமிப்பை பாங்கில் போடுகிறார்கள். பணம் வேண்டியவர்கள் பாங்கில் கடன் வாங்குகிறார்கள். இதில் பாங்குக்கு வட்டி கிடைக்கிறது. சர்க்கார் வசம் பாங்குகள்



இருந்தால் நல்லது. சர்க்காருக்கு நல்ல வருமானம் கிடைக்கும். பணம் போட்டவர்களுக்கும் பாதுகாப்பு இருக்கும். இன்ஷ்யூரன்ஸ் தொழிலும் இது போன்றதே.

ரிசர்வ் பாங்கு நாட்டின் முக்கிய பாங்கு. இது சர்க்கார் வசம் இருக்கிறது. இம்பீரியல் பாங்கு மற்றொரு பெரிய பாங்கு. அதைச் சமீபத்தில் சர்க்கார் எடுத்துக்கொண்டது. வேறு சில பாங்குகளில் சர்க்காருக்குப் பங்கு இருக்கிறது. இந்தப் பாங்குகளையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும். ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் தொழிலையும் சர்க்கார் கைப்பற்றி விட்டது.

இதுவரை விவசாயிகளுக்குக் கடன் வாங்கப் போதிய வசதி இல்லை. அவர்களை லேவாதேவிக்காரர் சுரண்டுகிறார்கள். இனிமேல்

விவசாயிகளுக்கு நியாய வட்டிக்குக் கடன் கிடைக்கும். அரசாங்க பாங்குகள் அதற்கு ஏற்பாடு செய்யும். இன்ஷ்யூரன்ஸ் வசதியும் கிராமங்களுக்குப் பரவும்.

அதிக வருமானம் உள்ளவர்களுக்கு சர்க்கார் வரி போடுகிறது. பெரிய வருமானக்காரர்கள் ரூபாய்க்கு நாலணக்கூட வரி கொடுக்கிறார்கள். அதிக லாபம் சம்பாதிப்போருக்கு வேறு வரி உண்டு. பணக்காரர் இறந்தால் அவர் சொத்துக்கு வரி உண்டு. அதிகச் சொத்தில் நூற்றுக்கு நாற்பது ரூபாய் வரியாகும். இதற்கு எஸ்டேட் வரி என்று பெயர். செல்வம் சிலரிடம் குவிவதை இவ்வரிகள் குறைக்கும்.

அதிக வருமானத்துக்கு வரி போடுவது நல்லதே. அதிக வருமானம் சேராமல் தடுப்பது அதைவிட நல்லது. ஒருவர் இவ்வளவுதான் சம்பாதிக்கலாம் என்ற வரம்பு வேண்டும். இவ் விஷயத்தையும் சர்க்கார் ஆலோசித்து வருகிறது. வருஷா வருஷம் சொத்து வரி போட்டால் அதிகச் சொத்துக்கள் கரைந்துவிடும். இதையும் அரசாங்கம் யோசித்து வருகிறது.

கம்பெனிகளில் பலர் பணம் போடுகிறார்கள். ஆனால் ஒரு சிலரே கம்பெனியை நிர்வகிக்கிறார்கள். பணம் போட்டவர்களை இந்த நிர்

வாகிகள் மோசம் செய்ய முடியும். சில கம்பெனி களில் முன்பு மோசடிகள் நடந்தன. இனி மோசடி சாத்தியம் அல்ல. இதற்குச் சட்டம் செய்யப் பட்டிருக்கிறது.

இரண்டாவது திட்டத்தில் சோஷலிஸம்

முதலாவது ஐந்து ஆண்டுத் திட்டம் முடிந்துவிட்டது. அந்த முடிவுவரை நகர்ந்துள்ள சோஷலிஸ வேலைகளைப் பார்த்தோம். இப்போது



இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்டம் வந்திருக் கிறது. இரண்டாவது திட்டத்தில் அதிக சோஷ லிஸக் காரியங்கள் நடக்கும். அவற்றைப் பார்ப்போம்.

தொழில் துறையில் இந்தியா பின் தங்கி நிற்கிறது. தொழில்கள் பெருகினால்தான் சோஷ லிஸம் வரும். இரண்டாவது திட்ட காலத்தில் தொழில்கள் பெருகும். இரும்பு, உருக்கு, இயந்திர நிர்மாணம் முதலியவை ஆதாரத் தொழில்கள். மற்றத் தொழில்களுக்கு இவையே தாய். இந்த ஆதாரத் தொழில்கள் அதிகமாக ஏற்படும். இவற்றைப் பெரும்பாலும் சர்க்காரே ஆரம்பிக்கும். அதோடு குடிசைத் தொழில்

களும் பெருகும். இவை கூட்டுறவு முறையில் நடக்கும். சில வியாபாரங்களையும் சர்க்கார் நடத்தும்.

சோஷலிஸத்தில் எல்லாருக்கும் வேலை கிடைக்க வேண்டும். பத்து ஆண்டுகளில் இதைச் செய்வது சர்க்காரின் உத்தேசம். இரண்டாவது திட்ட காலத்தில் புதிதாகச் சுமார் 120 லட்சம் பேருக்குப் பிழைப்புக் கிடைக்கும்.

கையில் உள்ள பணத்துக்கு ஏற்ற திட்டம் போடுவது ஒரு முறை. ஜனங்களின் தேவைக்கு ஏற்ற திட்டம் போடுவது சோஷலிஸ முறை. பிந்திய முறையைச் சேர்ந்ததே நம் இரண்டாவது திட்டம்.

உற்பத்தியாகும் பண்டங்களே உண்மையான செல்வம். முதல் திட்டத்தைவிட இரண்டாவது திட்டத்தில் இச் செல்வம் பெருகும். இப்போதைவிடக் கால் மடங்கு இது அதிகரிக்கும். செல்வம் அதிகரித்தால் அதில் மக்களின் பங்கும் அதிகரிக்கும். ஆகவே நம் வாழ்க்கை நிலை உயரும்.

விவசாயச் சீர்திருத்தம் தொடர்ந்து நடக்கும். நில உடைமைக்கு வரம்பு போடப்படும். கூட்

டுறவு விவசாயத்துக்கு அதிக ஆதரவு கிடைக்கும். இதற்காகத் துண்டு நிலங்களை ஒன்று சேர்க்கச் சர்க்கார் உதவும். பணக்காரர்களுக்கு இப்போதைவிட அதிக வரிகள் போடப்படும். கல்வி, சுகாதாரம், மாதர் க்ஷேமம், தொழிலாளர் க்ஷேமம் முதலிய வசதிகளும் அதிகரிக்கும்.

அத்தியாயம் 5

# நமது பொறுப்பு

**சோ**ஷலிஸம் என்பது பூலோக சொர்க்கம். ஆனல் அதைச் சுலபமாக அடைய முடியாது. கடுமையான உழைப்பு அதற்கு அவசியம். அதோடு நியாயமான பங்கீடும் அவசியம். உழைத்து அதிகச் செல்வத்தை உண்டாக்க வேண்டும். அந்தச் செல்வத்தை நியாயமாக எல்லாருக்கும் பங்கிட வேண்டும்.



சர்க்கார் இதற்கு முயன்று வருகிறது. இதற்காகவே ஐந்து ஆண்டுத் திட்டங்கள் உள்ளன. இந்தத் திட்டங்களை நிறைவேற்ற நாம் உதவ வேண்டும்.

சோஷலிஸத்தில் செல்வம் எல்லாருக்கும் சொந்தம். சர்க்கார் கட்டியுள்ள அணைகள், தொழிற்சாலைகள் எல்லாம் நம் சொத்துக்களே. இந்தப் பொதுச் சொத்தை நாம் கண்மணிபோல் காககவேண்டும்.

சோஷலிஸம் நினைத்த மாத்திரத்தில் வராது. உதாரணமாக ரஷியாவில் சோஷலிஸம் ஏற்பட 30 வருடங்கள் ஆயின. ரஷிய மக்கள் அரும் பாடு பட்டனர். சீனா தேசமும் சோஷலிஸத்தை ஏற்படுத்தி வருகிறது. இது பூர்த்தியாகச் சுமார் 20 வருடங்கள் ஆகும். சீனத் தலைவர்களே இவ்வாறு கூறுகின்றனர்.

முன்பு சில நாடுகளில் பலாத்கார வழியில் சோஷலிஸம் ஏற்பட்டது. ஆனால் இப்போது உலக நிலைமை மோசமாக இருக்கிறது. நாம் பலாத்காரத்தில் இறங்கினால் அந்நியர் தலையிடுவர். பிறகு சுதந்திரம் போய்விடும். சோஷலிஸமும் வராது.

அஹிம்ஸை மூலம் சுதந்திரத்தைப் பெற்றோம். அஹிம்ஸை மூலமே சோஷலிஸத்தையும் பெறலாம். இதை நேருஜி அடிக்கடி கூறியிருக்கிறார்.

# இந்தப் புத்தகம்...



நாகரிகமாக வாழத்தெரிந்த சமுதாயங்களிலே தலைசிறந்தது தமிழர் சமுதாயம். உலகத்தின் எல்லாப் பகுதியினரையும் தன் சீரிய வாழ்க்கை முறையினால் தொன்று தொட்டு கவர்ந்து வருவது நம் "தமிழர் இனிய வாழ்வு" என்றால் மிகையாகாது. அவ்வக் காலங்களில் தமிழ்நாட்டிற்கு விஜயம் செய்த எவரும் தமிழ் நாட்டினரின் வாழ்க்கை முறையை வியந்து பாராட்டாதோர் இல்லை.

நமது மாபெரும் தலைவர் பண்டித நேரு அவர்களும் "பல்வேறு தேசங்களிலும் பல்வேறு சமுதாயத்தினிடமும் காணாத, ஓர் உன்னதமான அமைதியுடன் கூடிய வாழ்க்கையை தென்னாட்டில் தான் பார்க்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார்.

தமிழர்களுடைய வாழ்க்கை குழந்தைப் பருவமுதல் வாலிபமாகி வயயோதிகம் அடையும்வரை, இருபாலாரும், நடத்திய, நடத்த வேண்டிய வாழ்க்கை முறைகளை பல பேரறிஞர்கள் ஆதார பூர்வமாக இதில் விளக்கியிருக்கின்றனர்.

பிற சமுதாயப் பழக்கவழக்கங்கள் ஆட்கொண்டு விட்டதாலேயோ என்னவோ நம்மிலேயும் சிலர், நம்முடைய வாழ்க்கை முறையை ஒழுங்காகத் தெரிந்து கொள்ளாமலிருக்கின்றனர். இது ஒரு சமுதாயத்தினர் பெருமை கொள்ளக்கூடியதல்ல. பல அறிஞர்கள் மூலமாக நம்முடைய வாழ்க்கை முறையைத் தெரிந்து கொண்டு பெருமையுடன் அம்முறையைக் காத்து வரவேண்டும்.

**தமிழகம்,** 59, பிராட்வே
சென்னை - 1.

Jacket Printed at Commercial Printing & Publishing House, Madras-1.